ஜனவரி
2020

விண்மீன் .காம்

# மூன்றாவது வார நடப்பு நிகழ்வுகள்

15 ஜனவரி – 21 ஜனவரி

www.winmeen.com

# நடப்பு நிகழ்வுகள்

**1.ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின், 'SCOஇன் 8 அதிசயங்கள்' பட்டியலில் இடம்பெற்றுள்ள இந்திய நினைவுச்சின்னம் எது?**

அ. தாஜ் மஹால்

**ஆ. ஒற்றுமையின் சிலை ☑**

இ. தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் திருக்கோவில்

ஈ. அஜந்தா குகைகள்



- குஜராத்தின் அண்மையில் கட்டப்பட்ட, 'ஒற்றுமை சிலை' என்னும் நினைவுச்சின்னம், அண்மையில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பால் (SCO) வெளியிடப்பட்ட, 'SCOஇன் எட்டு அதிசயங்கள்' பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இது உலகின் மிகவுயரமான சிலையாகும். இந்திய விடுதலைப் போராட்ட வீரர் சர்தார் வல்லபாய் படேலுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இது கட்டப்பட்டது.
- குஜராத்தின் கெவாடியா காலனியில் 182 மீ., உயரத்துக்கு அமைக்கப்பட்டுள்ள இச்சிலையை, கடந்த 2018 அக்டோபரில் இந்தியப்பிரதமர் திறந்துவைத்தார். சர்தார் சரோவர் அணைக்கு நேரெதிரே நர்மதா ஆற்றில் இந்தச் சிலை கட்டப்பட்டது. இந்தியா, பாகிஸ்தான், சீனா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், இரஷ்யா, தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய எட்டு உறுப்புநாடுகளை SCO கொண்டுள்ளது.

**2.அண்மையில், மத்திய சேமக்காவல்படையின் புதிய தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. இராஜீவ் இராய் பட்நாகர்

**ஆ. AP மகேஸ்வரி ☑**

இ. விஜய் குமார்

ஈ. அரவிந்த்குமார்



- மத்திய அமைச்சரவை நியமனக்குழுவால் மத்திய சேமக்காவல்படையின் (CRPF) புதிய தலைமை இயக்குநராக AP மகேஸ்வரி IPS நியமிக்கப்பட்டுள்ளார். CRPFஇன் முந்தைய தலைமை இயக்குநரான இராஜீவ் இராய் பட்நாகர் கடந்த மாதம் ஓய்வுபெற்றார். ITBPஇன் தலைமை இயக்குநராக இருந்த SS தேஸ்வாலுக்கு CRPFஇல் கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.
- தற்போது, மத்திய உள்துறை அமைச்சகத்தின் சிறப்புச் செயலாளராக (உள்நாட்டு பாதுகாப்பு) உள்ள AP மகேஸ்வரி IPS (உத்தரபிரதேசம்: 1984), 2021ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 வரை புதிய தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**3.இந்திய சந்தையில் தனது இருப்பை விரிவுபடுத்துவதற்காக 'EbixCash'உடன் அண்மையில் இணைந்த பிரபலமான பன்னாட்டுப் பணப் பரிமாற்ற நிறுவனம் எது?**

அ. பேபால்

**ஆ. மனிகிராம் ☑**

இ. வெஸ்டர்ன் யூனியன்

ஈ. டிரான்ஸ்பர் வைஸ்

MoneyGram.

❖ பன்னாட்டுப் பணப் பரிமாற்ற நிறுவனமான மனிகிராம் (MoneyGram) மற்றும் மென்பொருள் மற்றும் மின்னணு வணிகச் சேவைகளின் முன்னணி பன்னாட்டு வழங்குநரான EbixCash ஆகியவை இந்தியாவில் தங்கள் வணிகத்தை விரிவுபடுத்துவதற்காக, அண்மையில் ஒப்பந்தமொன்றில் கையெழு–த்திட்டன. இதன்மூலம், EbixCash, இந்தியாவில், மனிகிராமின் பிரத்யேக பங்காளியாக இருக்கும்.

❖ Ebix குழுமத்தின் பல்–விநியோக நிலையங்கள் மூலம் கிராமப்புறங்களில் கூடுதல் நுகர்வோரை மனிகிராமால் சென்றடைய முடியும். மேலும், EbixCashஇன் வாடிக்கையாளர்கள், மனிகிராம் தளத்தை பல்வேறு நாடுகளில் பணப்பரிமாற்ற சேவைகளுக்கும் பயன்படுத்த இயலும்.

**4.செயலிழந்த விமானத்தை மீட்கும் கருவியைப்பெறவுள்ள முதல் இந்திய வானூர்தி நிலையம் எது?**



அ. சத்ரபதி சிவாஜி பன்னாட்டு வானூர்தி நிலையம், மும்பை

ஆ. இந்திராகாந்தி பன்னாட்டு வானூர்தி நிலையம், புது தில்லி

**இ. கெம்பகவுடா பன்னாட்டு வானூர்தி நிலையம், பெங்களூரு ☑**

ஈ. பன்னாட்டு வானூர்தி நிலையம், கொச்சின்

❖ செயலிழந்த வானூர்திகளை மீட்டெடுக்கும் திறனைக்கொண்ட இந்தியாவின் முதல் வானூர்தி நிலையமாக பெங்களூருவின் கெம்பகவுடா பன்னாட்டு வானூர்தி நிலையம் மாறியுள்ளது. சமீபத்தில், பெங்களூரு பன்னாட்டு விமான நிலையத்திற்கான செயலிழந்த வானூர்திகளை மீட்கும் கருவிகளை (**D**isabled **A**ircraft **R**ecovery **E**quipment – **DARE**) தயாரித்து, பணியில் ஈடுபடுத்துவதற்காக பெங்களூர் பன்னாட்டு விமான நிலைய நிறுவனம் (BIAL), முன்னணி விமான உபகரணங்கள் தயாரிப்பாளரான KUNZ GmbH உடன் கூட்டிணைந்தது. இதன்மூலம், KUNZ GmbH BIAL உடன் இணைந்து செயலிழந்த வானூர்தி மீட்புப் பயிற்சிக்கான மையத்தை BIAL நிறுவும்.

**5. 5 இந்திய மாநிலங்களைச்சேர்ந்த 15 தொழில்நுட்ப துளிர் நிறுவனங்களுக்கு வழிகாட்டுதலை வழங்க உள்ளதாக அண்மையில் அறிவித்த நிறுவனம் எது?**




அ. கூகிள்

**ஆ. மைக்ரோசாப்ட் ☑**

இ. அமேசான்

ஈ. பிளிப்கார்ட்

❖ குஜராத், மகாராஷ்டிரா, இராஜஸ்தான், கேரளா மற்றும் தெலுங்கானா ஆகிய ஐந்து மாநிலங்களிலிருந்து 54 தொழில்நுட்ப துளிர் நிறுவனங்களைத் தேர்வுசெய்துள்ளதாக மைக்ரோசாப்ட் நிறுவனம் சமீபத்தில் அறிவித்தது. இந்தத் துளிர் நிறுவனங்கள், 'Emerge–X' போட்டியின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

❖ தேர்ந்தெடுக்கப்பட்ட 54 நிறுவனங்களில், ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் முதல் மூன்று இடத்தில் உள்ள 15 துளிர்நிறுவனங்களுக்கு மைக்ரோசாப்ட் வழிகாட்டுதல்களை வழங்கும். தேர்ந்தெடுக்கப்பட்ட துளிர் நிறுவனங்கள் அனைத்தும், 'Highway to a Hundred Unicorns' எனப்படும் மாநிலங்களில் துளிர் நிறுவன சூழலமைப்பை வலுப்படுத்தும் மைக்ரோசாப்ட் முயற்சியின் ஒருபகுதியாகும்.

**6.இந்தியா முழுவதும் 'ஆயுதப்படை படைவீரர்கள் நாள்' கொண்டாடப்பட்ட தேதி எது?**



அ. ஜனவரி 10

ஆ. ஜனவரி 12

**இ. ஜனவரி 14 ☑**

ஈ. ஜனவரி 13

- முதல் இந்திய இராணுவத் தளபதி KM கரியப்பாவின் ஓய்வுதேதியை நினைவுகூரும் வகையில், 2017இல் நிறுவப்பட்டதிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 14 அன்று 'ஆயுதப்படை படைவீரர்கள் நாள்' கொண்டாடப்பட்டு வருகிறது. 1949 முதல் 1953 வரை இந்திய இராணுவத்தின் தளபதியாக KM கரியப்பா பணியாற்றினார்.
- இந்திய இராணுவத்தின் தற்போதைய தலைமைத் தளபதியான MM நரவனே, இராணுவ நாளை அனுசரிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, 1965 மற்றும் 1971ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான போர்களில் போராடிய அதிகாரிகளுக்கு சிறப்பு ஓய்வூதியம் வழங்கப்படும் என அறிவித்தார்.

**7.மலேசிய மாஸ்டர்ஸ் 2020 பட்டத்தை வென்ற பாட்மிண்டன் வீரர் யார்?**




அ. விக்டர் ஆக்செல்சன்

**ஆ. கென்டோ மோமோட்டா ☑**

இ. சாய் பிரனீத்

ஈ. கிடாம்பி ஸ்ரீகாந்த்

- மலேசியா மாஸ்டர்ஸ் 2020 போட்டியின் இறுதியாட்டத்தில் ஜப்பானைச் சேர்ந்த உலகின் No:1 பாட்மிண்டன் வீரரான கென்டோ மோமோட்டா முன்னாள் உலக சாம்பியனான விக்டர் ஆக்செல்சனை வீழ்த்தி பட்டத்தை வென்றார். கென்டோ மோமோட்டா, 2019ஆம் ஆண்டில் 11 முக்கியப் பட்டங்களை வென்றுள்ளார். இது ஒரு பாட்மிண்டன் வீரரால் ஓராண்டில் பெறப்பட்ட மிக அதிகமான பட்டங்களாகும்.
- 2019 BWF உலக சுற்றுப்பயண இறுதிப்போட்டிகளில் வென்ற அவர், BWF "ஆண்டின் சிறந்த வீரர்" என்பதற்கான விருதையும் பெற்றார். வரவிருக்கும் டோக்கியோ ஒலிம்பிக்கில், கென்டோ, ஜப்பானை பிரதிநிதித்துவப்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. சீனப் பூப்பந்து வீராங்கனை சென் யூ ஃபீ, பெண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றார்.

**8.அண்மையில், இந்திய ரிசர்வ் வங்கியின் நான்காவது துணை ஆளுநராக நியமிக்கப்பட்டவர் யார்?**



அ. U K சின்ஹா

ஆ. அஜய் தியாகி

**இ. மைக்கேல் பத்ரா ☑**

ஈ. கிருஷ்ணமூர்த்தி சுப்பிரமணியம்

- இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாக இயக்குநரான மைக்கேல் தேவபிரதா பத்ராவை அதன் நான்காவது துணை ஆளுநராக அரசு நியமித்துள்ளது. ரிசர்வ் வங்கியில் தற்போது மூன்று துணை ஆளுநர்கள் (NS விஸ்வநாதன், BP கனுங்கோ மற்றும் MK ஜெயின்) உள்ளனர்.

- முன்னாள் துணை ஆளுநர் வைரல் ஆச்சார்யா, தனிப்பட்ட காரணங்களைக்கூறி, கடந்த 2019 ஜூலை மாதம் தனது பதவியை ராஜினாமா செய்தார். ஆச்சார்யா பதவி விலகிய ஆறு மாதங்களுக்குப்பிறகு அந்தப்பதவிக்கு மைக்கேல் பத்ரா நியமிக்கப்படுகிறார். மைக்கேல் பத்ரா, ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநராக நியமிக்கப்படுவதிலிருந்து அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்கு பணியாற்றுவார்.

**9.இந்தியக் குடியரசின் துணைத்தலைவர், நெல்லூரில், எந்த இந்திய மொழியின் ஆய்வுகளுக்காக ஒரு சிறப்பு மையத்தை திறந்துவைக்கவுள்ளார்?**

அ. தமிழ்

**ஆ. தெலுங்கு ☑**

இ. கன்னடம்

ஈ. மலையாளம்

- இந்தியக் குடியரசின் துணைத்தலைவரான M வெங்கையா, நெல்லூரில், செம்மொழித் தெலுங்கில் ஆய்வுகள் புரிவதற்கான சிறப்பு மையத்தைத் திறந்துவைக்கவுள்ளார். மைசூருவில் அமைந்துள்ள, மத்திய இந்திய மொழிகள் நிறுவனத்தில் அமைந்துள்ள செம்மொழித்தெலுங்குக்கான ஆய்வுகளை மேற்கொள்ளும் சிறப்பு மையத்தை, ஏதேனும் ஒரு தெலுங்கு மாநிலத்திற்கு மாற்றுமாறு வெங்கையா மத்திய அரசுக்கு பரிந்துரைத்திருந்தார். அது இப்போது ஆந்திரத்தின் நெல்லூருக்கு மாற்றப்பட்டுள்ளது.

- தெலுங்கு மொழி எழுத்துக்களின் பரிணாமம், எண்ணிமமயமாக்கல் மற்றும் செம்மொழித்தெலுங்கு இலக்கியங்களை வெளியிடுதல் குறித்து இந்த மையம் ஆராய்ச்சி மேற்கொள்கிறது.

**10.ISROஇன் தகவல் தொடர்பு செயற்கைக்கோளான GSAT–30, எந்த ஏவுகணையின்மூலம் விண்ணில் ஏவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது?**

அ. PSLV C – 44

ஆ. PSLV C – 46

இ. PSLV C – 47

**ஈ. Ariane 5 ☑**



- ISROஇன் தகவல் தொடர்பு சேவைக்கான GSAT–30 செயற்கைக்கோள், Ariane–5 ஏவுகணைமூலம் பிரெஞ்சு கயானாவிலிருந்து ஜனவரி.17 அன்று விண்ணில் ஏவப்படுகிறது. 2005இல் செலுத்தப்பட்ட INSAT–4A செயற்கைக்கோளின் ஆயுட்காலம் முடிந்துவிட்ட நிலையில், அதற்கு மாற்றாக தற்போது, 3,357 கி.கி எடைகொண்ட அதிநவீன GSAT–30 செயற்கைக்கோளை ISRO வடிவமைத்துள்ளது.

- பதினைந்து ஆண்டுகள் ஆயுட்காலம் உடைய GSAT–30 செயற்கைக்கோள் VSAT நெட்வொர்க், DTH தொலைக்காட்சி சேவை மற்றும் அலைபேசி சேவைக்கு உதவும். 2020ஆம் ஆண்டில், ISRO ஏவும் முதல் செயற்கைக்கோள் GSAT–30 என்பது குறிப்பிடத்தக்கது.

## நடப்பு நிகழ்வுகள்

**1.ஒவ்வோர் ஆண்டும், இந்தியா முழுவதும், 'இராணுவ நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?**



அ. ஜனவரி 13

ஆ. ஜனவரி 14

**இ. ஜனவரி 15 ☑**

ஈ. ஜனவரி 16

❖ ஒவ்வோர் ஆண்டும் ஜன.15ஆம் தேதியன்று, 'இராணுவ நாள்' நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. 72ஆவது 'இராணுவ நாள்' அண்மையில் 2020 ஜனவரி 15 அன்று அனுசரிக்கப்பட்டது. 1949 ஜன.15 அன்று, ஜெனரல் KM கரியப்பா, விடுதலைக்குப்பிறகு இந்திய இராணுவத்தின் முதல் தலைமைத் தளபதியாக பொறுப்பேற்றார். அந்நாள் ஒவ்வோர் ஆண்டும் இராணுவ நாளாக நினைவுகூரப்படுகிறது.

❖ ஒவ்வோர் ஆண்டும் புது தில்லியில் உள்ள அணிவகுப்பு மைதானத்தில் இந்திய ராணுவம், இராணுவ அணிவகுப்பை நடத்துகிறது. இந்த இராணுவ நாள் அணிவகுப்பில் அனைத்து ஆண்கள் படையை வழிநடத்திய முதல் பெண் என்ற பெருமையை கேப்டன் தானியா ஷெர்கில் பெற்றார்.

**2.இரயில் நிலையங்களுக்கேச் சென்று வருவாயைச் சேகரிப்பதற்காக, இந்திய இரயில்வேயின் தெற்கு – மத்திய இரயில்வே மண்டலத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள வங்கி எது?**

அ. பஞ்சாப் தேசிய வங்கி

ஆ. பரோடா வங்கி


**இ. பாரத ஸ்டேட் வங்கி ☑**

ஈ. இந்தியன் வங்கி

❖ தெற்கு – மத்திய ரயில்வே மண்டலத்தின் அனைத்து 585 இரயில் நிலையங்களுக்கும் நேரடியாகச் சென்று வருவாயைச்சேகரிப்பதற்கான ஒப்பந்தத்தில் பாரத ஸ்டேட் வங்கியும் தென்–மத்திய இரயில்வே மண்டலமும் கையெழுத்திட்டுள்ளன. தற்போது, சிறு இரயில் நிலையங்களில் ஈட்டப்படும் வருவாய் அனைத்தும் இரயில்வே காவலர்களின் பாதுகாப்போடு பணப்பெட்டகத்தில் வைத்து அனுப்பப்படுகிறது.

❖ இந்தச் செயல்முறை மிகவும் கடினமானதாகும். இந்த ஒப்பந்தம், எவ்வித தாமதமும் இல்லாமல் அரசாங்க வங்கிக்கணக்கில் பணம் செலுத்தப்படுவதை உறுதி செய்யும்.

**3.உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சியில் அதன் வளர்ச்சிக்கு உதவுவதற்காக, இந்தியா, அண்மையில் எந்த நாட்டிற்கு கிட்டத்தட்ட 1 இலட்சம் கல்வி உரைநூல்களை வழங்கியுள்ளது?**



**அ. மடகாஸ்கர் ☑**

ஆ. மலாவி

இ. மொசாம்பிக்

ஈ. ஜிம்பாப்வே

❖ மடகாஸ்கருக்கான இந்திய தூதர் அபய் குமார், அண்மையில், உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சியில் அந் நாட்டின் வளர்ச்சிக்கு உதவுவதற்காக, கிட்டத்தட்ட, 1 இலட்சம் கல்வி உரைநூல்களை கிழக்காப்பிரிக்க நாடான மடகாஸ்கருக்கு வழங்கினார். மடகாஸ்கரின் உயர்கல்வி மற்றும் அறிவியல் ஆராய்ச்சி அமைச்சரால் இந்நூல்கள் அதன் தலைநகரமான அந்தனநாரிவோவில் நடைபெற்ற நிகழ்வில் பெற்றுக் கொள்ளப்பட்டன. தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலால் வெளியிடப்பட்ட இந்நூல்கள் தயாரிக்க ஆன மொத்த செலவு தோராயமாக ₹76 இலட்சம் ஆகும்.

**4.பன்னாட்டுக் கிரிக்கெட் கவுன்சில் வழங்கிய, 'ஆண்டின் சிறந்த வீரருக்கான' சர் கார்பீல்ட் சோபர்ஸ் கோப்பையை வென்ற கிரிக்கெட் வீரர் யார்?**

அ. விராட் கோலி

**ஆ. பென் ஸ்டோக்ஸ் ☑**

இ. கேன் வில்லியம்சன்

ஈ. ரோகித் சர்மா



❖ பன்னாட்டுக் கிரிக்கெட் கவுன்சிலானது (ICC) அண்மையில், ICC 2019ஆம் ஆண்டுக்கான விருதுகளை வழங்கியது. ஆண்டின் சிறந்த வீரருக்கான 'சர் கார்பீல்ட் சோபர்ஸ் கோப்பை' என்ற மிகவுயரிய விருதை இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் பென் ஸ்டோக்ஸ் பெற்றார். இந்திய தொடக்க ஆட்டக்காரரான ரோகித் சர்மா, 'ஆண்டின் சிறந்த ஒருநாள் வீரர்' விருதும், ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் பாட் கம்மின்சுக்கு, 'ஆண்டின் சிறந்த டெஸ்ட் வீரர்' விருதும் வழங்கப்பட்டது.

❖ விராட் கோலிக்கு, 'ஸ்பிரிட் ஆஃப் கிரிக்கெட்' விருது வழங்கப்பட்டது. மற்றொரு இந்திய கிரிக்கெட் வீரர் தீபக் சாகருக்கு, 'ஆண்டின் சிறந்த T20 பங்களிப்பு' விருது வழங்கப்பட்டது.

**5.இந்தியாவில் உள்ள சிறு மற்றும் நடுத்தர வணிகங்களை டிஜிட்டல் மயமாக்குவதற்காக $1 பில்லியன் டாலரை முதலீடு செய்யவுள்ளதாக அண்மையில் அறிவித்த நிறுவனம் எது?**

அ. கூகிள்

ஆ. மைக்ரோசாப்ட்

**இ. அமேசான் ☑**

ஈ. பிளிப்கார்ட்

❖ அண்மையில், அமேசானின் தலைவரான ஜெப் பெசோஸ், இந்தியாவில் உள்ள சிறு மற்றும் நடுத்தர வணிகங்களை டிஜிட்டல் மயமாக்குவதற்காக அமேசான் நிறுவனம் $1 பில்லியன் டாலர் முதலீடு செய்வதாக அறிவித்தார். 2025ஆம் ஆண்டளவில், அமேசான் இந்தியா, $10 பில்லியன் டாலர் மதிப்புள்ள இந்தியத் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்யும் என ஜெப் அறிவித்தார்.

❖ அண்மையில் அவர் மேற்கொண்ட அலுவல்பூர்வ வருகையின்போது இந்த அறிவிப்பை வெளியிட்டார். அண்மையில், அகில இந்திய வர்த்தகர்களின் கூட்டமைப்பு (CAIT), அமேசான் நிறுவனம் நியாயமற்ற வணிக நடைமுறைகளைப் பின்பற்றுவதாக குற்றஞ்சாட்டியது குறிப்பிடத்தக்கது.

**6.இந்தியாவில் கல்விநிலை குறித்த ஆண்டறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. மனிதவள மற்றும் மேம்பாட்டு அமைச்சகம்

ஆ. NITI ஆயோக்

**இ. பிரதம் – தன்னார்வ தொண்டு நிறுவனம் ☑**

ஈ. UNICEF

- 'பிரதம்' என அழைக்கப்படும் அரசுசாரா அமைப்பு இந்தியாவில் கல்விநிலை குறித்த ஆண்டறிக்கையை வெளியிட்டு வருகிறது. 2019ஆம் ஆண்டுக்கான அறிக்கையை சமீபத்தில் அவ்வமைப்பு வெளியிட்டது. அரசுநடத்தும் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் பயிலும் சமவயதுடைய சிறார்களைவிட தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் 5 வயதுடைய குழந்தைககளின் கற்றல் திறன் சிறப்பாக உள்ளதாக அவ்வறிக்கை கூறுகிறது.
- 4 முதல் 8 வயதுக்குட்பட்ட சிறுமிகளின் சேர்க்கை அளவானது சிறுவர்களை ஒப்பிடுகையில் அதிகமாக உள்ளதாகவும், அரசுநடத்தும் பள்ளிகளில் சிறுவர்களைவிட அதிகமாக சிறுமிகளே சேர்க்கப்படுதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது, தெளிவான பாலின இடைவெளியைக் காட்டுகிறது.

**7.எந்தப் பன்னாட்டுத் தொலைத்தொடர்பு நிறுவனத்தின் பிரிவு, அண்மையில், 'OneSearch' என்ற புதிய தனியுரிமையை மையமாகக்கொண்ட தேடுபொறியை அறிமுகப்படுத்தியுள்ளது?**

அ. AT & T

**ஆ. வெரிசோன் ☑**

இ. வோடபோன்

ஈ. சீனா மொபைல்

- பன்னாட்டுத் தொலைத்தொடர்பு நிறுவனமான வெரிசோன் தகவல்தொடர்புகளின் ஒரு பிரிவான 'வெரிசோன் மீடியா' சமீபத்தில் தனியுரிமையை மையமாகக்கொண்ட ஒரு புதிய தேடுபொறியை, 'One Search' என்ற பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- பயனர்களின் தேடல் வரலாறு இந்தத் தேடுபொறியில் சேமிக்கப்படாது என்றும் பயனர்களின் தானாக – அழியக்கூடிய தேடல் தரவு விளம்பரதாரர்களுடன் பகிரப்படாது என்றும் கூறப்படுகிறது. இந்தப்புதிய தேடுபொறி, பக்கச்சார்பற்ற மற்றும் வடிகட்டப்படாத முடிவுகளையும்தரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**8.அண்மையில் காலமான பிரபல திரைப்படத்தயாரிப்பாளரும் இயக்குநருமான மன்மோகன் மோகபத்ரா, எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?**

அ. மேற்கு வங்கம்

**ஆ. ஒடிசா ☑**



இ. கர்நாடகா

ஈ. ஆந்திரபிரதேசம்

❖ ஒடிசாவைச்சேர்ந்த மூத்த திரைப்படத் தயாரிப்பாளரும், இயக்குநருமான மன்மோகன் மோகபத்ரா அண்மையில் காலமானார். தொடர்ச்சியாக எட்டு ஆண்டுகளாக சிறந்த ஒடியா திரைப்படத்திற்கான தேசிய திரைப்பட விருதுகளை அவர் வென்றுள்ளார். 1976இல் வெளிவந்த, 'சீதா ராதி' அவரது முதல் முழுநீள ஒடியாமொழித்திரைப்படமாகும். வெளிநாட்டில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட முதல் ஒடியா படமும் இதுதான். பல்வேறு ஹிந்தி படங்களையும் அவர் இயக்கியுள்ளார். இவரது மறைவுக்கு, ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக் இரங்கல் தெரிவித்துள்ளார்.

**9. நெகிழிக்கழிவு மேலாண்மையில் புதுமையான முறைகளைப் பின்பற்றியதற்காக எந்த மாநிலத்தின் மாவட்ட நிர்வாகம் 'சுவச்சதா தர்பன்' விருதை வென்றுள்ளது?**

அ. மேற்கு வங்கம்

**ஆ. ஒடிசா ☑**

இ. கர்நாடகா

ஈ. ஆந்திரபிரதேசம்

❖ ஒடிசா மாநிலத்தின் பூரி மாவட்ட நிர்வாகம், அண்மையில், நெகிழிக்கழிவு மேலாண்மையில் புதுமை –யான வழிமுறைகளைப் பின்பற்றியதற்காக 'சுவச்சதா தர்பன்' விருதை வென்றுள்ளது. இவ்விருதை, ஜல் சக்தி அமைச்சகத்தின்கீழ் உள்ள குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை வழங்கியது. புது தில்லியில், 'ODF Sustainability' ஏற்பாடுசெய்திருந்த ஒரு பயிலரங்கத்தின்போது இவ்விருது ஹிந்தித் திரையுலக நடிகர் அமீர்கானால் வழங்கப்பட்டது. நெகிழிக்கழிவிலிருந்து பூரி முற்றிலும் விடுபட ஒடிசா அரசு கடந்த ஆண்டு ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

**10. சாலைப் பாதுகாப்பு நிறுவனங்களின் கூட்டத்தில், சமீபத்தில் தொடங்கப்பட்ட, 'ஒருங்கிணைந்த சாலை விபத்து தரவுத்தள'த்தை உருவாக்கிய நிறுவனம் எது?**

**அ. இந்திய தொழில்நுட்ப நிறுவனம் – மெட்ராஸ் ☑**

ஆ. இந்திய அறிவியல் நிறுவனம்

இ. இந்திய தொழில்நுட்ப நிறுவனம் – கான்பூர்

ஈ. இந்திய தொழில்நுட்ப நிறுவனம் – கரக்பூர்

❖ சாலைப்பாதுகாப்பு நிறுவனங்களின் சந்திப்பின்போது மத்திய அமைச்சர்கள் இராஜ்நாத் சிங் மற்றும் நிதின் கட்கரி ஆகியோர் 'ஒருங்கிணைந்த சாலை விபத்து தரவுத்தளம் – Integrated Road Accident Database (IRAD)'ஐ தொடங்கிவைத்தனர்.

❖ IRAD என்பது சாலை விபத்துகளுக்கான காரணங்களை பகுப்பாய்வு செய்வதற்கும் அவற்றைக் குறைப்பதற்கான தீர்வுகளை உருவாக்குவதற்குமான ஒரு மைய விபத்து தரவுத்தள மேலாண்மை அமைப்பு ஆகும். இந்தத் தரவுத்தளத்தை இந்திய தொழில்நுட்ப நிறுவனம் – மெட்ராஸ் (IIT–M) ₹258 கோடி செலவில் உருவாக்கியுள்ளது. உலக வங்கியால் ஆதரிக்கப்படும் இது, தேசிய தகவல் மையம் (NIC) மூலம் செயல்படுத்தப்படுகிறது.

## நடப்பு நிகழ்வுகள்

**1.சுவிஸ் வங்கியான ஜூலியஸ் பேர் நடத்திய சமீபத்திய ஆய்வின்படி, ஆடம்பரப்பொருட்கள் கிடைக்கப் பெறும் உலகின் மிகவும் விலையுயர்ந்த நகரமாக விளங்கும் நகரம் எது?**

அ. மும்பை

**ஆ. ஹாங்காங் ☑**

இ. நியூயார்க்

ஈ. சிங்கப்பூர்



❖ சுவிஸ் வங்கியான ஜூலியஸ் பேர் (Julius Baer), அண்மையில், உலகெங்கிலும் உள்ள 28 நகரங்களை ஆடம்பரப் பொருட்கள் மற்றும் சேவைகள் கிடைக்கப் பெறுவதன் அடிப்படையில் அவற்றை விலை உயர்ந்ததாக மதிப்பிடுவதற்காக ஆய்வொன்றை நடத்தியது. இதன்படி, வங்கியால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆடம்பரப்பொருட்களுள் பலவை ஹாங்காங் நகரத்தைச் சேர்ந்ததாக இருந்தது.

❖ எனவே, ஆடம்பரப்பொருட்கள் கிடைக்கப்பெறும் உலகின் மிகவும் விலையுயர்ந்த நகரமாக ஹாங்காங் விளங்குகிறது. இரண்டு, மூன்று மற்றும் ஐந்தாவது இடங்களை முறையே ஷாங்காய், டோக்கியோ மற்றும் சிங்கப்பூர் கைப்பற்றியதால், ஆசியா, மிகவும் விலையுயர்ந்த கண்டமாக கருதப்படுகிறது.

**2.அண்மையில் மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சரால் வழங்கப்பட்ட 'சிறந்த தேசிய நெடுஞ்சாலை விருதுகள்' எந்த ஆண்டில் நிறுவப்பட்டன?**

அ. 2016

ஆ. 2017

**இ. 2018 ☑**

ஈ. 2019

❖ மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் கடந்த 2018ஆம் ஆண்டில் 'சிறந்த தேசிய நெடுஞ்சாலை விருதுகள்' நிறுவப்பட்டன. பின்னர் அது ஆண்டுதோறும் வழங்கப்படும் விருதாக மாற்றப்பட்டு, சமீபத்தில் அதன் இரண்டாம் பதிப்புக்கான விருதை மத்திய அமைச்சர் நிதின் கட்கரி புது தில்லியில் வழங்கினார்.

❖ கட்டுமானம், செயல்பாடு, பராமரிப்பு, சுங்கவரி கட்டம் மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆகியவற்றில் சிறப்பாக செயல்படும் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. இவ்விருதில் 7 பிரிவுகள் உள்ளன. இறுதிப்பட்டியலிலிருந்து 12 வெற்றியாளர்கள் இதற்கென தேர்வுசெய்யப்பட்டனர்.

**3.எந்த நகரத்தில், 'டிஜிட்டல் வெளியில் இந்தியப் பாரம்பரியம்' என்பது குறித்த நாட்டின் முதல் கண்காட்சி தொடங்கப்பட்டுள்ளது?**

அ. வாரணாசி

ஆ. பூரி

**இ. புது தில்லி ☑**

ஈ. ஜெய்ப்பூர்

- 'டிஜிட்டல் வெளியில் இந்தியப் பாரம்பரியம்' என்பது பற்றிய சிறப்புக்கண்காட்சியையும், புது தில்லியில் இரண்டு நாள் நடந்த முதலாவது சர்வதேச பாரம்பரிய கருத்தரங்கத்தையும் மத்திய கலாசார அமைச்சர் பிரகலாத் சிங் படேல் திறந்துவைத்தார்.
- இந்தக்கண்காட்சியானது தில்லி IIT உடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களின் பார்வைக்காக இது ஒருமாத காலத்திற்கு இது திறந்திருக்கும். அறிவியல் & தொழில்நுட்பத்துறையின் இந்திய டிஜிட்டல் பாரம்பரிய திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட இந்திய நினைவுச்சின்னங்களின் டிஜிட்டல் வடிவங்கள் இதில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**4.காமன்வெல்த் நாடாளுமன்றச் சங்கத்தின் (இந்தியப் பிராந்தியம்) ஏழாவது மாநாடு நடைபெறும் நகரம் எது?**

அ. புது தில்லி

ஆ. மும்பை

**இ. லக்னோ ☑**

ஈ. அகமதாபாத்

- காமன்வெல்த் நாடாளுமன்றச் சங்கத்தின் (இந்தியப் பிராந்தியம்) ஏழாவது மாநாடு, அண்மையில், உத்தரபிரதேச மாநிலத்தின் லக்னோவில் தொடங்கி வைக்கப்பட்டது. லக்னோவில் உள்ள சட்டமன்ற அவைக்கட்டடத்தில், மக்களவை அவைத்தலைவர் ஓம் பிர்லா இம்மாநாட்டைத் தொடங்கிவைத்தார்.
- பல்வேறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் & பிரதிநிதிகள் பங்கேற்கும் இந்த மாநாட்டின் கருப்பொருள் 'Role of Legislators – சட்டமன்ற உறுப்பினர்களின் பங்கு' என்பதாகும். காமன்வெல்த்தின் நல்லாட்சி நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களது பணியாள –ர்களுக்கும் ஆதரவாக காமன்வெல்த் நாடாளுமன்றச்சங்கம் உருவாக்கப்பட்டது.

**5.இந்தியாவின் முதல் மனிதரை விண்வெளிக்கு அனுப்பும் திட்டத்திற்கு, எத்தனை இந்திய விண்வெளி வீரர்கள் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்?**

அ. இரண்டு

ஆ. மூன்று

**இ. நான்கு ☑**

ஈ. ஐந்து



- இந்தியாவின் முதல் மனிதரை விண்வெளிக்கு அனுப்பும் திட்டத்திற்கு, இந்திய விமானப்படையைச் சேர்ந்த 4 விண்வெளி வீரர்கள் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர். இந்த நான்கு விண்வெளி வீரர்களும் இந்த மாதம் தொடங்கி அடுத்துவரும் 11 மாதங்களுக்கு இரஷ்யாவில் பயிற்சி பெறுவார்கள் எனச் சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இரஷ்யாவில் பயிற்சியை நிறைவுசெய்தபின், அவ்விண்வெளி வீரர்களுக்கு இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு வடிவமைத்துள்ள குழு மற்றும் சேவைத் தொகுதியின் செயல்பாடு மற்றும் உருவகப்படுத்துதலில் பயிற்சியளிக்கப்படும்.

❖ மனிதர்களை அனுப்பும் இந்த முதல் திட்டத்திற்கு முன்னர், 2020ஆம் ஆண்டு இறுதிக்குள் மனிதர் போன்ற உருவங்கொண்ட எந்திரத்தை ISRO விண்வெளிக்கு அனுப்பவுள்ளது.

## 6. ICCஇன் ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணிகளின் கேப்டனாக அறிவிக்கப்பட்டுள்ள கிரிக்கெட் வீரர் யார்?

அ. மகேந்திர சிங் தோனி

**ஆ. விராட் கோலி ☑**

இ. கேன் வில்லியம்சன்

ஈ. இயோன் மோர்கன்



❖ பன்னாட்டுக்கிரிக்கெட் கவுன்சில் (ICC) சமீபத்தில் இந்த ஆண்டின் அணியை அறிவித்ததுடன் ஆண்டு விருதுகளையும் வழங்கியது. இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் விராட் கோலி, ICCஇன் ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணிகளின் கேப்டனாக தேர்வுசெய்யப்பட்டார். விராட்டைத் தவிர, ICC அணியில், மயங்க் அகர்வால் மட்டுமே இடம்பெற்றார். ஒருநாள் அணியில் உள்ள மற்ற இந்தியர்கள் – ரோகித் சர்மா, முகமது ஷாமி மற்றும் குல்தீப் யாதவ்.

❖ ICC வழங்கிய 'ஸ்பிரிட் ஆப் கிரிக்கெட்' விருதையும் விராட் கோலி வென்றுள்ளார். இரு அணிகளுக்கும் கேப்டனாக இருக்கும் கோலியுடன், இங்கிலாந்தின் பென் ஸ்டோக்ஸ் மற்றும் ஆஸ்திரேலியாவின் மிச்செல் ஸ்டார்க் ஆகியோர் ICCஇன் ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணிகளில் இடம்பெற்றுள்ளனர்.

## 7.எந்நாட்டுடனான வரலாற்றுச்சிறப்புமிக்க முதற்கட்ட வர்த்தக ஒப்பந்தத்தில், ஐக்கிய அமெரிக்க நாடுகள் கையெழுத்திட்டுள்ளது?

அ. இந்தியா

**ஆ. சீனா ☑**

இ. இரஷ்யா

ஈ. சுவிச்சர்லாந்து



❖ ஓராண்டுகாலமாக நடைபெற்ற பல்வேறு பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, ஐக்கிய அமெரிக்க நாடுகள் சீனாவுடனான முதற்கட்ட வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தத்தில், ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் சீனாவின் துணைப்பிரதமர் லியு ஹீ ஆகியோர் கையெழுத்திட்டனர். 'வரலாற்றுச் சிறப்புமிக்கது' என டிரம்ப்பால் மேற்கோள் காட்டப்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தின் முதற்கட்டத்தில், அறிவுசார் சொத்துக்களைப் பாதுகாத்தல், அமெரிக்க நிதிச்சேவைகளை அகற்றுதல் மற்றும் நாணய முறைகேடுகளை முடிவுக்குக்கொண்டு வருதல் ஆகியவை அடங்கும்.

❖ இந்த ஒப்பந்தம் ஐக்கிய அமெரிக்க நாடுகள் – சீனா இருதரப்பு உறவுகளை மீண்டும் சமநிலைப்படுத்தும் மற்றும் நாடுகளுக்கிடையே நீண்டகாலமாக நிலுவையில் உள்ள மோதல்களைத் தீர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**8.அண்மையில் மேற்கு இரயில்வேயின் பொது மேலாளராக அலோக் கன்சால் நியமிக்கப்பட்டார். மேற்கு இரயில்வேயின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?**

அ. காந்தி நகர்

ஆ. அகமதாபாத்

**இ. மும்பை ☑**

ஈ. சூரத்

❖ இந்திய இரயில்வேயின் மேற்கு இரயில்வே மண்டலம், இந்தியாவின் நிதியியல் தலைநகரமான மும்பையையும் குஜராத்தையும் மத்தியபிரதேசம் மற்றும் இராஜஸ்தானின் சில பகுதிகளையும் இணைக்கிறது. இதன் தலைமையகம் மும்பையின் சர்ச்ச்கேட் நிலையத்தில் அமைந்துள்ளது.

❖ இந்திய இரயில்வே சர்வீஸ் ஆப் இன்ஜினியர்ஸின் (IRSE) 1983ஆம் ஆண்டுத் தொகுதியைச் சேர்ந்த அதிகாரியான அலோக் கன்சால், அண்மையில் மேற்கு இரயில்வே மண்டலத்தின் பொது மேலாளராக நியமிக்கப்பட்டார். முந்தைய பொது மேலாளர் அனில் குமார் குப்தா, கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தின்போது ஓய்வுபெற்றார்.

**9.எந்தத் தொழில்நுட்ப நிறுவனம், சமீபத்தில் தனது 'எட்ஜ் குரோமியம்' உலாவியின் புதிய பதிப்பை, மேக் மற்றும் விண்டோஸ் இயங்குதளங்களுக்காக அறிமுகப்படுத்தியது?**

அ. கூகிள்

**ஆ. மைக்ரோசாப்ட் ☑**

இ. மொஸில்லா

ஈ. ஆப்பிள்




❖ அண்மையில் மைக்ரோசாப்ட் தனது புதிய 'எட்ஜ் குரோமியம்' உலாவியை மேக் மற்றும் விண்டோஸ் இயங்குதளங்களுக்காக அறிமுகப்படுத்துவதாக அறிவித்தது. தொடக்கத்தில் நிறுவனப் பயனர்களை மைக்ரோசாப்ட் இலக்காக வைத்திருந்தாலும், பிற விண்டோஸ் & மேக் பயனர்கள் மைக்ரோசாப்டின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்திலிருந்து கைமுறையாக உலாவியை பதிவிறக்கம் செய்து நிறுவலாம்.

❖ விண்டோஸ் 10 பயனர்களுக்கு, விண்டோஸ் புதுப்பிப்பு மூலம் இவ்வுலாவி வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கூகிள் குரோமில் (Google Chrome) உள்ளதைப்போன்ற அம்சங்களை 'எட்ஜ் குரோமியம்' கொண்டுள்ளது மற்றும் குரோம் நீட்டிப்புகளையும் (extensions) இது ஆதரிக்கிறது.


**10.அதிபரால் அறிவிக்கப்பட்ட அரசியலமைப்பு திருத்தங்களுக்குப்பிறகு, எந்த நாட்டின் முழு அரசாங்கமும் அண்மையில் பதவி விலகியது?**

அ. சீனா

ஆ. பிரான்ஸ்

**இ. இரஷ்யா ☑**

ஈ. ஜெர்மனி



- அதிபர் பதவிக்கும் மீறி தனது அதிகாரங்களை நீட்டிக்கும் சில அரசியலமைப்பு திருத்தங்களை இரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் அறிவித்ததை அடுத்து, இரஷ்யாவின் முழு அரசாங்கமும் அண்மையில் பதவி விலகியது. இதில் இரஷ்யப் பிரதமர் டிமிட்ரி மெட்வெடேவும் அடங்குவார். புதின் தனது வருடாந்திர தேசிய உரையின்போது இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

- அடுத்த பிரதமராக இரஷ்ய வரிசேவையின் தலைவரான மிகைல் மிஷூஸ்டினையும் இரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் முன்மொழிந்துள்ளார். பிரதமர் பதவியிலிருந்து நீங்கும் மெட்வெடேவ், இரஷ்யாவின் பாதுகாப்பு கவுன்சிலின் துணைத்தலைவர் பதவிக்கு நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1. 2030ஆம் ஆண்டுக்குள் அதன் விநியோகச்சங்கிலி முழுவதும் சரிபாதி கரியமிலவாயு உமிழ்வைக் குறைக்கத் திட்டமிட்டுள்ளதாக அண்மையில் அறிவித்த தொழில்நுட்ப நிறுவனம் எது?**

அ. கூகிள்

**ஆ. மைக்ரோசாப்ட் ☑**

இ. இன்போசிஸ்

ஈ. IBM




- அண்மையில், காலநிலை மாற்றத்துக்கு தீர்வுகாண்பதற்காக ஒரு புதிய இலட்சியத்தை மைக்ரோசாப்ட் நிறுவனம் அமைத்துள்ளதாக அந்நிறுவனத்தின் தலைமை நிர்வாகி சத்யா நாதெல்லா கூறியுள்ளார். மேலும், அந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட கரியமிலவாயு வெளியேற்றத்தை நீக்குவதாகவும் அவர் உறுதிபட அறிவித்தார். 2030ஆம் ஆண்டளவில் அதன் விநியோகச் சங்கிலிகளிலிருந்து வெளியேற்றம் செய்யப்பட்ட கரியமிலவாயுவில் பாதிக்கும் மேற்பட்டதை நீக்க திட்டமிட்டுள்ளது.

- இத்திட்டத்தில், "காலநிலை புத்தாக்க நிதியத்தை" உருவாக்குவதும் அடங்கும்; அது, கரியமிலவாயுவை அகற்றுவதற்கான தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கு $1 பில்லியன் டாலர் நிதியை முதலீடு செய்யும். 1975ஆம் ஆண்டிலிருந்து (மைக்ரோசாப்ட் நிறுவப்பட்ட ஆண்டு) அந்நிறுவனம் மேற்கொண்ட நேரடி மற்றும் மறைமுக கரியமிலவாயு உமிழ்வை 2050ஆம் ஆண்டுக்குள் முழுவதுமாக அகற்ற அந்நிறுவனம் நோக்கம் கொண்டுள்ளது.

**2.தவறிய அழைப்பின்மூலம் பயனர்களை எச்சரிக்கை செய்யும் வசதிக்காக, அண்மையில், '88843 – 33331' என்ற கட்டணமில்லா எண் அறிமுகம் செய்யப்பட்டது. இந்த எண் தொடர்புடைய பயன்பாடு எது?**

அ. FASTag ☑

ஆ. BHIM

இ. UMANG

ஈ. தேசிய ஓய்வூதியத் திட்டம்

- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கூட்டிணைவு நிறுவனமான இந்திய நெடுஞ்சாலை மேலாண்மை நிறுவனமானது, பயனர்கள் தங்களது FASTag இருப்பைச் (balance) சரிபார்த்துக் கொள்வதற்காக அண்மையில் 'தவறிய அழைப்பின்மூலம் எச்சரிக்கைசெய்யும் வசதி – missed call alert' ஒன்றை அறிமுகப்படுத்தியது. இதற்காக, '8884333331' என்ற நாள் முழுவதும் பயன்பாட்டிலிருக்கும் கட்டணமில்லா எண் ஒன்றும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- NHAI பிரீபெய்ட் பணப்பையில், தங்கள் அலைபேசி எண்ணைப் பதிவுசெய்துள்ள FASTag பயனர்கள், அவர்களது FASTag இருப்பைச் சரிபார்ப்பதற்காக, அந்தக் குறிப்பிட்ட எண்ணுக்கு தவறிய அழைப்பை விடுக்கலாம். முன்கூட்டியே கட்டணஞ்செலுத்துவதற்கு, பயனர்கள், FASTag செயலியை பயன்படுத்தப் –படலாம். அதனை NHAI பணப்பையுடனோ அல்லது 13 வங்கிகளின் சேமிப்புக்கணக்குடனோ இணைத்துக்கொள்ளலாம்.

**3.அண்மையில் கொடியசைத்து தொடங்கிவைக்கப்பட்ட இரண்டாவது தேஜஸ் எக்ஸ்பிரஸ், மும்பையை எந்த நகரத்துடன் இணைக்கிறது?**

அ. புனே

ஆ. ஹைதராபாத்

**இ. அகமதாபாத் ☑**

ஈ. நாக்பூர்



❖ இந்திய இரயில்வேயின் IRCTC நிறுவனத்தால் இயக்கப்படும் நாட்டின் 2ஆவது தேஜஸ் அதிவிரைவு இரயில் அகமதாபாத் – மும்பை இடையே தொடங்கிவைக்கப்பட்டது. குஜராத் முதலமைச்சர் விஜய் ரூபானி இந்த இரயிலை கொடியசைத்து தொடக்கிவைத்தார். கடந்த ஆண்டு அக்டோபர் மாதம், இந்திய இரயில்வேயின் துணை நிறுவனமான IRCTC, தில்லி – இலக்னோ இடையே தேஜஸ் இரயிலை தொடக்கிவைத்தது. இந்தியாவில் தனியார் நிறுவனத்தால் இயக்கப்படும் முதல் இரயில் இதுவாகும்.

❖ ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை தவிர்த்து மற்ற ஆறு நாட்களில் இந்த இரயில் இயங்கும். தேஜஸ் எக்ஸ்பிரஸைப் பொறுத்தவரை, IRCTC ஒரு மாறும் விலை நிர்ணய திட்டத்தைப் பின்பற்றுகிறது. மேலும், இது இரயில் தாமதங்களின்போது வாடிக்கையாளர்களுக்கு இழப்பீட்டையும் வழங்குகிறது.

**4. 'உலகப் பொருளாதார நிலைமை மற்றும் எதிர்கால வாய்ப்புகள்' குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

அ. உலக வங்கி

**ஆ. ஐக்கிய நாடுகள் அவை ☑**

இ. பன்னாட்டு நாணய நிதியம்

ஈ. ஆசிய வளர்ச்சி வங்கி

❖ ஐக்கிய நாடுகள் அவையின் 'உலகப்பொருளாதார நிலைமை மற்றும் வாய்ப்புகள்' குறித்த அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையின்படி, நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) வளர்ச்சி 5.7% ஆக இருக்கும் என்றும் அடுத்த நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) வளர்ச்சி விகிதம் 6.6% ஆக உயரும் என்றும் ஐ.நா கணித்துள்ளது.

❖ கடந்த 2019ஆம் ஆண்டின் 'உலகப்பொருளாதார நிலைமை மற்றும் வாய்ப்புகள்' குறித்த அறிக்கையில், நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 7.6% ஆக இருக்கும் என ஐ.நா. கணித்திருந்தது. அது இப்போது 5.7% ஆக குறைக்கப்பட்டுள்ளது. அண்மைய அறிக்கையின்படி, கிழக்காசியா, உலகின் மிகவேகமாக வளர்ந்துவரும் பிராந்தியமாகவும், உலக வளர்ச்சிக்கு மிகப்பெரிய பங்களிப்பாளராகவும் தொடர்ந்து இருந்துவருகிறது. இந்த ஆண்டு (2020) உலக வளர்ச்சி 1.8 சதவீதமாகக் குறையும் என்றும் அவ்வறிக்கை கணித்துள்ளது.

**5. "கிருஷி மந்தன்" உச்சிமாநாட்டின் முதல் பதிப்பு நடைபெறுகிற மாநிலம் எது?**




அ. தமிழ்நாடு

ஆ. ஆந்திரபிரதேசம்


**இ. குஜராத் ☑**

ஈ. அஸ்ஸாம்

❖ "கிருஷி மந்தன்" உச்சிமாநாட்டின் முதல் பதிப்பு குஜராத்தின் அகமதாபாத்தில் நடைபெறுகிறது. "கிருஷி மந்தன்" என்பது 'உணவு–வேளாண்–வணிகம்–ஊரக வளர்ச்சி' குறித்த ஆசியாவின் மிகப்பெரிய உச்சிமாநாடு ஆகும். அகமதாபாத்தில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தின் உணவு மற்றும் வேளாண் வணிகக்குழுவால் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

❖ வணிகவியலாளர்கள், தொழிலதிபர்கள், கல்வியாளர்கள், கொள்கை–வகுப்பாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்கள் தங்கள் அறிவையும் நிபுணத்துவத்தையும் பகிர்ந்துகொள்ள இது ஒரு தளமாகும். 2 நாள் நிகழ்வான இதில் மாணவர்கள், உணவு, வேளாண் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளைச் சேர்ந்த 1,500 க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

**6. அண்மையில், யாருக்கு 29ஆவது 'சரஸ்வதி சம்மன்' விருது வழங்கப்பட்டது?**



அ. விக்ரம் சேத்

ஆ. மகாபலேஷ்வர் சைல்

**இ. வாசுதேவ் மோகி ☑**

ஈ. பத்ம சச்தேவ்

❖ மதிப்புமிக்க 29ஆவது 'சரஸ்வதி சம்மன்' விருதுக்கு புகழ்பெற்ற சிந்திமொழி எழுத்தாளரும் கவியுமான வாசுதேவ் மோகி தேர்வுசெய்யப்பட்டுள்ளார். KK பிர்லா அறக்கட்டளையால் வழங்கப்பெறும் இவ்விருது, இலக்கியத்துறையில் புகழ்பெற்ற விருதாக கருதப்படுகிறது. 'செக் புக்' என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக வாசுதேவ் மோகிக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

❖ இச்சிறுகதைத்தொகுப்பு, சமூகத்தின் விளிம்புநிலையில் வாழும் மக்களின் துன்பங்களை விவரிக்கிறது. இது, சிந்தி மொழியில் கடந்த 2012ஆம் ஆண்டில் வெளியானது.

**7.அஸ்ஸாமின் பயணிகள் படகுத்துறையை நவீனமயமாக்குவதற்காக இந்திய அரசும் அஸ்ஸாம் மாநில அரசும் எந்தப் பன்னாட்டு நிதி அமைப்புடனான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன?**



அ. ஆசிய வளர்ச்சி வங்கி

ஆ. ஆசிய உட்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு வங்கி

**இ. உலக வங்கி ☑**

ஈ. புதிய வளர்ச்சி வங்கி

❖ அஸ்ஸாமின் பயணிகள் படகுத்துறையை நவீனமயமாக்குவதற்கு உதவும் வகையில், இந்திய அரசு, அஸ்ஸாம் மாநில அரசு மற்றும் உலக வங்கி ஆகியவை, புது தில்லியில், $88 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. அஸ்ஸாமின் பயணிகள் படகுத்துறை, பிரம்மபுத்ரா உள்ளிட்ட பிரதான ஆறுகளில் பயணிகள் சேவையை மேற்கொண்டு வருகிறது.

❖ முந்நூற்றி அறுபதுக்கும் மேற்பட்ட படகு வழித்தடங்கள் அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ளன; அவற்றுள் பெரும்பாலானவை பிரம்மபுத்ரா வழியாக செல்கின்றன. எனவே, இது பிரம்மபுத்ரா பள்ளத்தாக்கின் மிக முக்கியமான போக்குவரத்து வழிமுறையாக உள்ளது. பயணிகள் படகுத்துறை உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு அஸ்ஸாம் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துத் திட்டம் அம்மாநிலத்திற்கு உதவும்.

**8.பிரெஞ்சு கயானாவிலிருந்து அண்மையில் ஏவப்பட்ட இந்திய செயற்கைக்கோள் எது?**

அ. RISAT – 2B

**ஆ. GSAT – 30 ☑**

இ. GSAT – 7A

ஈ. IRNSS – 1H



❖ இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் உயராற்றலுடைய தகவல் தொடர்பு செயற்கைக்கோளான GSAT–30, பிரெஞ்சு கயானாவிலிருந்து 2020 ஜனவரி.17 அன்று வெற்றிகரமாக ஏவப்பட்டது. உயர்தர தொலைத்தொடர்பு, அலைபேசி & ஒலிபரப்பு சேவையை வழங்குவதே இந்தச் செயற்கைக்கோளின் நோக்கமாகும். இந்தச் செயற்கைக்கோள், புவி–ஒத்திசைவு சுற்றுப்பாதையில், 'Ariane–5' ஏவுகணை மூலம் நிலை நிறுத்தப்பட்டது.

**9.இந்திய சுற்றுலாப்பயணிகளுக்கு மின்னணு–நுழைவு இசைவு வசதியை வழங்கவுள்ள நாடு எது?**

அ. கனடா

**ஆ. தென்னாப்பிரிக்கா ☑**

இ. கென்யா

ஈ. அயர்லாந்து




❖ இந்திய சுற்றுலாப்பயணிகளுக்கு தென்னாப்பிரிக்காவால் மின்னணு–நுழைவு இசைவு (e–visa) வசதி வழங்கப்படும் எனத் தென்னாப்பிரிக்க சுற்றுலாத்துறை அமைச்சர் எம்மமோலோகோ குபாய்–நுகுபனே தெரிவித்துள்ளார். இதற்கான வலைத்தளம், இந்தியாவில், சோதனை அடிப்படையில் வரும் வாரத்தில் தொடங்கப்படும். அலுவல்பூர்வ தரவுகளின்படி, கடந்த 2019 அக்டோபர் மாத நிலவரப்படி, 81316'க்கும் மேற்பட்ட இந்தியர்கள் தென்னாப்பிரிக்காவுக்கு பயணஞ்செய்துள்ளனர். இது, ஆண்டுக்கு ஆண்டு 30% வரை அதிகரிக்கிறது. எதிர்காலத்தில் 50% வரை இது அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**10.அண்மையில் இந்திய இராணுவத்தால் நடத்தப்பட்ட மிகப்பெரிய வான்வழிப்பயிற்சியின் பெயரென்ன?**

அ. ஹிம் விஜய்

ஆ. துருவ் சக்தி



இ. விங்க்ட் ரைடர் ☑

ஈ. யுத் அபியாஸ்

❖ "Winged Raider" என்றழைக்கப்படும் மிகப்பெரிய வான்வழிப்பயிற்சியானது இந்திய இராணுவத்தால் வடகிழக்கு அரங்கில் அண்மையில் நடத்தப்பட்டது. ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட சிறப்புப்படைகள் இந்தப் பயிற்சியில் பங்கேற்றன. அப்படைகளைச் சேர்ந்த வீரர்கள் C–130 ஹெர்குலஸ் மற்றும் C–17 குளோப் மாஸ்டர் டிரான்ஸ்போர்ட்டர் விமானங்களிலிருந்து பயிற்சி மேற்கொண்டனர். இந்தப்பயிற்சியின்போது, இந்திய இராணுவத்திற்கும் இந்திய விமானப்படைக்கும் இடையில் தீவிரமான துல்லியமான மற்றும் தடையற்ற ஒருங்கிணைப்புடன் கூடிய நிலையில் புதிய வான்வழி உபகரணங்கள் சோதிக்கப்பட்டன.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ திருவள்ளுவர் திருநாள் விருதுகள்:

| விருது மற்றும் விருதாளர்களின் விவரங்கள் | |
|---|---|
| **விருது** | **விருதாளர்** |
| திருவள்ளுவர் விருது – 2020 | ந.நித்தியானந்த பாரதி |
| பேரறிஞர் அண்ணா விருது – 2019 | முனைவர் கோ.சமரசம் |
| பெருந்தலைவர் காமராசர் விருது–2019 | முனைவர் மா.சு.மதிவாணன் |
| மகாகவி பாரதியார் விருது – 2019 | முனைவர் ப.சிவராஜி |
| பாவேந்தர் பாரதிதாசன் விருது–2019 | த.தேனிசை செல்லப்பா |
| தமிழ்த்தென்றல் திரு.வி.க.விருது–2019 | முனைவர் சே.சுந்தரராசன் |
| முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது | மருத்துவர் மணிமேகலை கண்ணன் |

❖ சித்திரைத் தமிழ்ப்புத்தாண்டு விருதுகள் – 2019:

| விருது | விருதாளர் |
|---|---|
| தமிழ்த்தாய் விருது | சிகாகோ தமிழ்ச் சங்கம் |
| கபிலர் விருது | புலவர் வெற்றியழகன் |
| உ.வே.சா விருது | வே.மகாதேவன் |
| கம்பர் விருது | முனைவர் சரசுவதி இராமநாதன் |
| சொல்லின் செல்வர் விருது | சிந்தனைக் கவிஞர் முனைவர் கவிதாசன் |
| ஜி.யு.போப் விருது | மரிய ஜோசப் சேவியர் |
| உமறுப்புலவர் விருது | லியாகத் அலிகான் |
| இளங்கோவடிகள் விருது | கவிக்கோ ஞானச்செல்வன் (எ) கோ.திருஞானசம்பந்தம் |
| அம்மா இலக்கிய விருது | உமையாள் முத்து |
| சிங்காரவேலர் விருது | அசோகா சுப்பிரமணியன் (எ) சோ.கா.சுப்பிரமணியன் |
| மறைமலையடிகளார் விருது | புலவர் ப.முத்துக்குமாரசுவாமி |
| அயோத்திதாசப் பண்டிதர் விருது | புலவர் வே.பிரபாகரன் |
| முதல்வரின் கணினித் தமிழ் விருது (2018) | முனைவர் த.நாகராசன் |

| சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதுகள் | |
|---|---|
| மாலன் (எ) வே.நாராயணன், சா.முகம்மது யூசுப், க.ஜ.மஸ்தான் அலி, பேராசிரியர் சிவ.முருகேசன், முனைவர் ந.கடிகாசலம், மரபின் மைந்தன் (முத்தையா), வத்சலா, மருத்துவர் முருகுதுரை, கிருசாங்கினி (எ) பிருந்தா நாகராசன், அ.மதிவாணன். | |
| **உலகத் தமிழ்ச் சங்க விருதுகள்** | |
| இலக்கிய விருது | பெ.இராசேந்திரன் (மலேசியா) |
| இலக்கண விருது | முத்து கஸ்தூரி பாய் (அருணா செல்வம்- பிரான்ஸ்) |
| மொழியியல் விருது | முனைவர் சுபதினி ரமேஷ் (இலங்கை) |

## நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில் எந்த இந்திய தொழில்முனைவோருக்கு, ஆஸ்திரேலியாவின் மிகவுயர்ந்த குடிமக்கள் கௌரவமான 'ஆர்டர் ஆப் ஆஸ்திரேலியா' வழங்கி கௌரவிக்கப்பட்டது?**

அ. ஆனந்த் மஹிந்திரா

**ஆ. கிரண் மஜூம்தார்-ஷா ☑**

இ. அஸிம் பிரேம்ஜி

ஈ. உதய் கோட்டக்



❖ பிரபல உயிரி–தொழில்நுட்ப நிறுவனமான பயோகானின் நிறுவனரும் தலைவருமான கிரண் மஜூம்தார்–ஷா, அண்மையில் ஆஸ்திரேலியாவின் மிகவுயர்ந்த குடிமக்கள் கௌரவமான 'ஆர்டர் ஆப் ஆஸ்திரேலியா' வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

❖ ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவை மேம்படுத்தியதற்காக, குறிப்பாக வணிகம் மற்றும் கல்வி அம்சங்களில் குறிப்பிடத்தக்க சேவை புரிந்தமைக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. அன்னை தெரசா, முன்னாள் அரசுத் தலைமை வழக்குரைஞர் சோலி சொராப்ஜி மற்றும் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் ஆகியோருக்குப்பிறகு இந்த மரியாதையைப் பெற்ற நான்காவது இந்திய குடிமகனாக கிரண் மஜூம்தார்–ஷா உள்ளார்.


**2.சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் திட்டமான, 'திருத்தப்பட்ட தேசிய காசநோய் கட்டுப்பாட்டு திட்டம்' அண்மையில் எவ்வாறு மறுபெயரிடப்பட்டது?**

அ. National Tuberculosis Elimination Programme (NTEP) ☑

ஆ. National Tuberculosis Control Programme (NTCP)

இ. National Tuberculosis Removal Programme (NTRP)

ஈ. National Tuberculosis Abolition Programme (NTAP)




❖ சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் திட்டமான, 'திருத்தப்பட்ட தேசிய காசநோய் கட்டுப்பாட்டு திட்டம்' அண்மையில், தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம் (NTEP) என மறுபெயரிடப்பட்டது. பெயர் மாற்றம் குறித்து அறிவிப்பை, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமைச் செயலாளர்களுக்கும் மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் தெரிவித்துள்ளது.

❖ கடந்த 2018இல், இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி, காசநோயை இந்தியாவிலிருந்து அகற்றுவதற்கான இலக்கு ஆண்டாக 2025ஆம் ஆண்டை அறிவித்தார். இது நிலையான வளர்ச்சி இலக்கில் (SDG) அறிவிக்கப்பட்ட ஆண்டைவிட ஐந்து ஆண்டுகள் முன்னதாகும். இந்த இலக்கின் காரணமாக, இந்தத் திட்டம் NTEP என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**3.அண்மையில் காலமான பாபு நட்கர்னி, எந்தத் துறையைச் சார்ந்தவர்?**

அ. அரசியல் ஆ. இலக்கியம்

**இ. விளையாட்டு ☑** ஈ. கலைகள்



- இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரரான பாபு நட்கர்னி (86), சமீபத்தில் மும்பையில் காலமானார். இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் 21 மெய்டன் ஓவர்களை தொடர்ச்சியாக வீசி சாதனை புரிந்தவர் பாபு நட்கர்னி.
- நாற்பத்தொரு டெஸ்ட் போட்டிகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்திய பின், தேசிய தேர்வுக்குழு உறுப்பினராகவும், மும்பை கிரிக்கெட் சங்கத்தின் இணைச்செயலராகவும் அவர் பணியாற்றினார்.

**4.எந்தப் பிரபலமான சர்வதேச நிறுவனம், 'The Banker' என்ற அதன் அசல் திரைப்படத்தை வெளியிட உள்ளது?**




அ. அமேசான்

**ஆ. ஆப்பிள் ☑**

இ. நெட்ப்ளிக்ஸ்

ஈ. HBO

- ஆப்பிள் தனது முதல் அசல் படங்களில் ஒன்றான, 'The Banker'ஐ வெளியிட திட்டமிட்டுள்ளது. இது, ஆப்பிள் டிவி பிளஸின் தொடக்ககால திரைப்படங்களுள் ஒன்றாகும். கடந்த ஆண்டு (2019) டிசம்பரில் வெளியிடப்படவிருந்த இந்தத் திரைப்படம் சில குற்றச்சாட்டுகள் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. தற்போது இது, திரையரங்குகளிலும் ஆப்பிள் டிவி பிளஸ் சந்தாதாரர்களுக்கும் இந்த ஆண்டு (2020) மார்ச் மாதத்தில் வெளியிடப்படவுள்ளது.
- 1960ஆம் ஆண்டுவாக்கில் வங்கித்துறையில் நிலவிவந்த இனப்பாகுபாடுகளை கையாளுவதற்கு மக்களுக்கு உதவிய இரண்டு ஆப்பிரிக்க-அமெரிக்க தொழிலதிபர்களான பெர்னார்ட் காரெட் சீனியர் மற்றும் ஜோ மோரிஸ் ஆகியோரின் மெய்வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்டது இத்திரைப்படம்.

**5.அண்மையில் நடைபெற்ற ரோம் தரவரிசை தொடர்–2020 நிகழ்வில், தங்கப்பதக்கம் வென்ற இந்திய மல்யுத்த வீராங்கனை யார்?**



அ. கீதா போகத்

ஆ. பபிதா போகத்

**இ. வினேஷ் போகத் ☑**

ஈ. சாக்ஷி மாலிக்

- அண்மையில் நடைபெற்ற ரோம் தரவரிசை தொடர்–2020 நிகழ்வில், இந்தியாவின் சிறந்த மல்யுத்த வீராங்கனையான வினேஷ் போகத், 53 கிலோ பிரிவில் தங்கப்பதக்கம் வென்றார். தங்கத்திற்கான இறுதிப்போட்டியில், ஈக்வடார் மல்யுத்த வீராங்கனை லூயிசா எலிசபெத் வால்வெர்டேவை 4–0 என்ற புள்ளிக்கணக்கில் தோற்கடித்தார். இது, 2020ஆம் ஆண்டில் அவர் பெற்ற முதல் தங்கப்பதக்கமாகும். முன்னதாக, மற்றொரு இந்திய மல்யுத்த வீரர் அன்ஷு மாலிக், 57 கிலோ பிரிவில் வெள்ளி வென்றார்.

**6.எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் நாடு உருவாக்கப்பட்டதிலிருந்து, பிறப்பு விகிதம் மிகவும் குறைவாகிச் சென்ற நாடு உள்ளது?**



அ. இந்தியா

**ஆ. சீனா ☑**

இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஈ. பிரேசில்

❖ எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் சீன மக்கள் குடியரசு உருவாக்கப்பட்ட 1949ஆம் ஆண்டிலிருந்து, நாட்டின் பிறப்பு விகிதம் மிகவும் குறைந்துள்ளதாக சீனா அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது. அந்தத் தரவுகளின்படி, பிறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 10.94 என உள்ளது. இது, ஆயிரத்திற்கு 12.43 என இருந்த முந்தைய (2017) பிறப்பு விகிதத்தைவிட குறைவாகும்.

❖ சீனாவில் விரைவாக அதிகரித்துவரும் முதியோர் மக்கள்தொகை இருக்கும் காரணத்தால், நகர்ப்புற தம்பதிகள் 2 குழந்தைகளைப் பெற்றெடுக்க அனுமதிக்கப்பட்டனர். மற்றொரு அண்மைய ஆய்வின்படி, எதிர்வரும் 2027ஆம் ஆண்டில், இந்தியா, மக்கள்தொகை எண்ணிக்கையில் சீனாவை முந்தும்.

**7.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற 6.5 கி.மீ., நீளமுள்ள Z–மோர் சுரங்கப்பாதை, எந்த மாநிலம் அல்லது / யூனியன் பிரதேசத்தில் கட்டப்படவுள்ளது?**



அ. ஹிமாச்சலப்பிரதேசம்

ஆ. சிக்கிம்

**இ. ஜம்மு – காஷ்மீர் ☑**

ஈ. அஸ்ஸாம்

❖ ஜம்மு–காஷ்மீரில் கட்டப்படவுள்ள Z–மோர் சுரங்கப்பாதையின் கட்டுமானத் திட்டம், APCO அமர்நாத்ஜி சுரங்கப்பாதை நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்துக்கும் அந்நிறுவனத்துக்கும் இடையே சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சர் நிதின் கட்கரி முன்னிலையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்கு ₹2,379 கோடி செலவாகும். மேலும், ஜம்மு–காஷ்மீரில் உள்ள சுற்றுலாத்தலமான சோனாமர்க்கிற்கு சாலை இணைப்பை இது வழங்கும்.

**8.தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய விமான நிலையங்களில், எந்த நாட்டிலிருந்து திரும்பும் பயணிகள் மட்டும் புதிய வகை கரோனா வைரஸ் (novel Corona virus – nCov) சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்?**



அ. இந்தோனேசியா

**ஆ. சீனா ☑**

இ. ஜப்பான்

ஈ. தாய்லாந்து

- சீனாவில் புதிய வகை கரோனோ வைரஸ்தொற்று (nCov) ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அண்மைய நிலவரப்படி 41 பேர் இந்தத்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவர்களுள் ஒருவர் உயிரிழந்தார். சீனாவுக்குப் பயணமாக சென்ற தாய்லாந்து நாட்டவர் ஒருவரும் ஜப்பான் நாட்டவர் ஒருவரும் இந்தத்தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

- அண்மையில், மத்திய சுகாதார அமைச்சகம் தில்லி, மும்பை மற்றும் கொல்கத்தா வானூர்தி நிலைய அதிகாரிகளுக்கு, சீனாவிலிருந்து வரும் பயணிகளைச் சோதனையிடவும், வைரஸ் தொற்றை வெப்ப மேவிகள் மூலம் சரிபார்க்கவும் அறிவுறுத்தியது. கரோனா வைரஸ்கள், வைரஸ்களின் ஒரு பெரிய குடும்பமாகும்; அவை, மத்திய கிழக்கு மூச்சுக்கூட்டறிகுறி கரோனா வைரஸ் (MERS–CoV) மற்றும் கடுந்தீவிர் மூச்சியக்க கூட்டறிகுறி (SARS) போன்ற நோய்களை ஏற்படுத்துகின்றன.

**9.ஹிந்துஸ்தான் ஊர்வாரக் மற்றும் ரசாயன் லிமிடெடின் (HURL) 'APNA UREA – Sona Ugle' பிராண்ட், அண்மையில், எந்த மத்திய அமைச்சரால் தொடங்கிவைக்கப்பட்டது?**

அ. இராம்விலாஸ் பஸ்வான்

ஆ. D V சதானந்த கௌடா ☑

இ. ஹர்சிம்ரத் கௌர் பாடல்

ஈ. ஹர்ஷ் வர்தன்



- மத்திய இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சரான D V சதானந்த கவுடா, அண்மையில், 'APNA UREA – Sona Ugle' என்ற பிராண்டையும் ஹிந்துஸ்தான் ஊர்வாரக் மற்றும் ரசாயன் லிமிடெடின் (HURL) இலச்சினையையும் அறிமுகப்படுத்தினார். HURL என்பது ஒரு கூட்டு நிறுவனம் ஆகும்; இது, கோல் இந்தியா லிட், NTPC லிட் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிட் ஆகிய 3 பொதுத்துறை மகா இரத்னா நிறுவனங்களால் ஊக்குவிக்கப்படுகிறது.

- கோரக்பூர் (உத்தரபிரதேசம்), பரவுனி (பீகார்) & சிந்திரி (ஜார்க்கண்ட்) ஆகிய இடங்களில் அமைந்துள்ள மூன்று நலிவுற்ற யூரியா ஆலைகளின் மீட்டுருவாக்கப் பணியை HURL மேற்கொண்டுள்ளது. இந்த ஆலைகள் 2021 பிப்ரவரியில் தொடங்கப்படவுள்ளன.

**10.மகாராஷ்டிராவில் அமைந்துள்ள எந்த ஆட்டோமொபைல் நிறுவனத்தின் உற்பத்தி ஆலையை வாங்குவதற்கு சீனாவின் கிரேட் வால் மோட்டார்ஸ் (GWM) நிறுவனம் முடிவு செய்துள்ளது?**

அ. ஜெனரல் மோட்டார்ஸ் ☑

ஆ. போர்டு

இ. வோக்ஸ்வாகன்

ஈ. டொயோட்டா

- சீனாவின் முன்னணி ஆட்டோமொபைல் உற்பத்தி நிறுவனமான கிரேட் வால் மோட்டார்ஸ் (GWM), மகாராஷ்டிர மாநிலத்தின் புனேவுக்கு அருகிலுள்ள தலேகானில் அமைந்துள்ள ஜெனரல் மோட்டார்ஸ் (GM) நிறுவனத்தின் உற்பத்தி ஆலையை வாங்குவதற்காக அமெரிக்க உற்பத்தியாளரான ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

- இந்தியாவில் உள்ள GMஇன் விற்பனைப்பிரிவான, 'செவ்ரோலெட் சேல்ஸ் இந்தியா', ஒரு தன்னாட்சி நிறுவனமாக தொடரும் என ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. தற்போதுள்ள இந்திய வாடிக்கையாளர்களுக்கு, விற்பனைக்குப் பிந்தைய சேவை மற்றும் உதிரிபாகங்கள் ஆதரவை அது தொடர்ந்து வழங்கும். வரும் 2021ஆம் ஆண்டுக்குள் இந்திய சந்தையில் நுழைவதற்கு கிரேட் வால் மோட்டார்ஸ் (GWM) திட்டமிட்டுள்ளது.

## நடப்பு நிகழ்வுகள்

**1.ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதத்தில் நடைபெறும் பிரபலமான சர்வதேச டென்னிஸ் போட்டி எது?**

அ. US ஓப்பன்

**ஆ. ஆஸ்திரேலிய ஓப்பன் ☑**

இ. பிரஞ்சு ஓப்பன்

ஈ. விம்பிள்டன்

❖ ஒவ்வோராண்டும் பிரெஞ்சு ஓப்பன், விம்பிள்டன் மற்றும் US ஓப்பன் போட்டிகளுக்கு முன்னர் நடக்கும் நான்கு கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டிகளுள் ஆஸ்திரேலிய ஓப்பன் போட்டி முதல் போட்டியாகும். டென்னிஸ் ஆஸ்திரேலியாவால் ஏற்பாடு செய்யப்படும் இது, பொதுவாக ஒவ்வொரு ஜனவரி மாதத்தின் கடைசி பதினைந்து நாட்களில் நடைபெறுகிறது.

❖ இந்த நிகழ்வில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான ஒற்றையர் மற்றும் இரட்டையர் போட்டிகள், கலப்பு இரட்டையர், ஜூனியர் சாம்பியன்ஷிப் மற்றும் சக்கர–நாற்காலி போட்டிகள் உட்பட பல பிரிவுகள் உள்ளன. 2020 ஆஸ்திரேலிய ஓப்பன் 108ஆவது பதிப்பாகும். இது ஜனவரி 20 முதல் பிப்ரவரி 2 வரை ஆஸ்திரேலியாவின் விக்டோரியாவின் மெல்பர்ன் பூங்காவில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நோவக் ஜோகோவிச்சும் நவோமி ஒசாகாவும் முறையே ஆடவர் ஒற்றையர் மற்றும் மகளிர் ஒற்றையர் போட்டிகளில் நடப்பு சாம்பியன்களாக உள்ளனர்.

**2. 18,000 கி.மீட்டருக்கும் மேல் உலகின் மிகநீண்ட விழிப்புணர்வு மனித சங்கிலியை ஏற்பாடுசெய்த மாநிலம் எது?**

அ. உத்தரபிரதேசம்

**ஆ. பீகார் ☑**

இ. ஒடிசா

ஈ. மேற்கு வங்கம்



❖ பீகார் மாநில அரசு தனது 'ஜல்–ஜீவன்–ஹரியாலி' பரப்புரையின்கீழ், அண்மையில் 18,034 கி.மீ., நீளமுள்ள மனித சங்கிலியை ஏற்பாடு செய்திருந்தது. ஐந்து கோடிக்கும் அதிகமான பொதுமக்கள் இதில் பங்கேற்றனர். இந்நிகழ்வில் பீகார் முதலமைச்சர் நிதீஷ்குமார், துணை முதல்வர் மற்றும் அவரது அமைச்சரவை உறுப்பினர்களுடன் கலந்துகொண்டார்.

❖ காலநிலை மாற்றம் மற்றும் மணக்கொடை மற்றும் குழந்தைத் திருமணம் போன்ற சமூக அவலங்கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த மனித சங்கிலி ஏற்பாடு செய்யப்பட்டது. 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் பீகாரில் நடத்தப்பட்ட மனித சங்கிலிகளுக்குப் பிறகு, உலகின் மிகநீளமான மனித சங்கிலியாக இது கருதப்படுகிறது.

**3. JLL நகர உந்தக்குறியீடு, 2020இன்படி, எந்த இந்திய நகரம், 'உலகின் மிகவும் ஆற்றல் வாய்ந்த நகரம்' எனத் தேர்வுசெய்யப்பட்டுள்ளது?**

அ. மும்பை

ஆ. பெங்களூரு

இ. கொல்கத்தா

**ஈ. ஹைதராபாத் ☑**



❖ தெலுங்கானாவின் தலைநகரமாகவும், தொழில்நுட்பத் தொழிற்துறைகளின் முக்கிய மையமாகவும் உள்ள ஹைதராபாத், 'JLL City Momentum Index, 2020'இன்படி, 'உலகின் மிக ஆற்றல்வாய்ந்த நகரம்' என அண்மையில் அறிவிக்கப்பட்டது. அமெரிக்காவைச்சேர்ந்த உலகளாவிய அசையாச்சொத்து சேவை நிறுவனமான ஜோன்ஸ் லாங் லாசல்லே (JLL), சமீபத்தில், உலகெங்கிலும் உள்ள 129 நகரங்களை மதிப்பீடு செய்து இந்தக்குறியீட்டை வெளியிட்டது.

❖ தரவரிசையின் இந்த ஏழாவது பதிப்பில், ஹைதராபாத் முதலிடத்தைப் பிடித்தது. அதைத்தொடர்ந்த இடத்தில் மற்றொரு இந்திய தொழில்நுட்ப மையமான பெங்களூரு உள்ளது. தென்னிந்திய நகரமான சென்னை ஐந்தாவது இடத்திலும், தில்லி ஆறாவது இடத்திலும் உள்ளது. 2020இன் குறியீட்டில், தரவரிசையின் முதல் 20 இடங்களில் ஏழு இடங்களைப்பிடித்து, இந்தியா முன்னிலை வகிக்கிறது.

**4.நீர்மூழ்கிக்கப்பலிலிருந்து ஏவக்கூடிய, 'K–4' என்னும் அணுசக்தித்திறனுடைய ஏவுகணையை அண்மையில் சோதித்த நாடு எது?**

அ. சீனா

ஆ. இரஷ்யா

**இ. இந்தியா ☑**

ஈ. இஸ்ரேல்



❖ அண்மையில், ஆந்திரக் கடற்கரையிலிருந்து 3,500 கிலோ மீட்டர் தாக்கும்திறனுடைய அணுசக்தித் திறன்கொண்ட ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக பரிசோதனை செய்தது. நீர்மூழ்கிக்கப்பலில் இருந்து ஏவக்கூடிய, 'K–4' என்ற எறி ஏவுகணையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) உருவாக்கியுள்ளது.

❖ இந்தியக் கடற்படையின் அரிஹந்த் வகுப்பு நீர்மூழ்கிக் கப்பல்களில் பொருத்தப்படவிருக்கும் இந்த ஏவுகணை, அதன் இலக்குகளைத்தாக்கும் சிறந்த கட்டமைப்பைக்கொண்டுள்ளது. அரிஹந்த், இந்தியா –வின் முதல் அணுசக்தியால் இயங்கும் 6000 டன் எடையுடைய நீர்மூழ்கிக்கப்பலாகும். இது, 2018 நவம்பரில் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

**5.சமீபத்தில் சிலிகா ஏரியில் 146 ஐராவதி ஓங்கில்கள் காணப்பட்டன. சிலிகா ஏரி எங்குள்ளது?**

அ. ஹிமாச்சல பிரதேசம்

**ஆ. ஒடிசா ☑**

இ. ஜம்மு & காஷ்மீர்

ஈ. உத்தரகண்ட்



❖ சிலிக்கா ஏரி என்பது ஒடிசா மாநிலத்தில் அமைந்துள்ள இந்தியாவின் மிகப்பெரிய உப்புநீர் ஏரியாகும். ஐராவதி ஓங்கில்கள் எனப்படும் அழிவின் விளிம்பிலிருக்கும் உயிரினங்கள் அதிக எண்ணிக்கையில் வாழும் ஏரியாகும் இது. சமீபத்தில் டால்பின் கணக்கெடுப்பை சிலிக்கா மேம்பாட்டு ஆணையம் அங்கு மேற்கொண்டது. அப்போது, 146 ஐராவதி ஓங்கில்கள் அங்கு காணப்பட்டன. கடந்த ஆண்டு (2019) கணக்கெடுப்பின்படி, இந்நீர்வாழ் பாலூட்டி இனங்களின் எண்ணிக்கை 151 ஆகும்.

**6.வனச்சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்காக குழுவொன்றை அமைக்க முடிவுசெய்துள்ள மாநிலம் எது?**

அ. மத்தியபிரதேசம்

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. கர்நாடகா

ஈ. கேரளா



❖ மகாராஷ்டிரா மாநில அரசானது மாநிலத்தின் வனப்பகுதிகளுக்கு வருபவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்காக, குழுவொன்றை அமைக்கவுள்ளது. மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் ஆதித்யா தாக்கரே தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

❖ முன்மொழியப்பட்ட இக்குழுவில் மாநில சுற்றுலா மற்றும் வன மேம்பாட்டுக் கழகத்தின் உறுப்பினர்கள் உள்ளனர். வனப்பாதுகாப்பை ஊக்குவிப்பதோடு, மாநிலத்தில் சுற்றுலாவை மேம்படுத்துவதுமே இந்தக் குழுவின் முக்கிய நோக்கமாகும். இதன்மூலம் தற்போதுள்ள சுற்றுலா மையங்களின் உட்கட்டமைப்பும் மேம்படுத்தப்படும்.

**7. POLNET 2.0 தளத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தொடங்கிவைக்கவுள்ளார். POLNET 2.0 உடன் தொடர்புடையது எது?**

அ. அரசியல் பரப்புரை

ஆ. அரசியல் வலையமைப்பு சேவை

**இ. காவல்துறை வலையமைப்பு சேவை ☑**

ஈ. காவல்துறை புகார் பதிவு



❖ ஜன.20 அன்று புது தில்லியில் நடந்த, 'பொதுப்பாதுகாப்பு மற்றும் பேரிடர் நிவாரண அமைப்புகளின் தலைவர்கள்' தேசிய மாநாட்டின்போது மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, POLNET 2.0 என்னும் புதியதளத்தை அறிமுகப்படுத்தவுள்ளார். காவலர் கம்பியில்லாத்தொடர்பு ஒருங்கிணைப்பு இயக்குநரகம் நாட்டில் **POLNET** அல்லது **POL**ice **NET**work சேவைகளை நிர்வகித்து செயல்படுத்தி வருகிறது.

❖ POLNET 2.0 எனப்படும் காவல்படையினருக்கான அதிநவீன பல்லூடக வசதிகளுடன் கூடிய ஒரு புதிய வலுவான தகவல்தொடர்பு தளத்தை அவ்வியக்குநரகம் உருவாக்கியுள்ளது. பேரிடர்கள் அல்லது சட்ட–ஒழுங்கு சிக்கல்களின்போது இது உதவும்.

**8.அண்மையில் மத்திய கனரக தொழிற்சாலைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் அமைச்சரால் தொடங்கிவைக்கப்பட்ட இந்திய மின்சாரத்துறையின் கண்காட்சியின் பெயரென்ன?**

அ. ELECASE

ஆ. ELECRAMA ☑

இ. ELECTRON

ஈ. ELECTRIC 2.0




❖ உத்தரபிரதேசத்தின் நொய்டா பெருநகரத்தில், 'ELECRAMA–2020'ஐ மத்திய கனரக தொழிற்சாலை மற்றும் பொது நிறுவனங்களின் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் திறந்துவைத்தார். தொடக்கவிழாவில் மின்சாரம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் R K சிங் கலந்துகொண்டார். இதனை ஈராண்டுகளுக்கு ஒருமுறை இந்திய மின் மற்றும் மின்னணு உற்பத்தியாளர்கள் சங்கம் (IEEMA) ஏற்பாடு செய்கிறது. இது இந்திய மின்துறையின் கண்காட்சியுடன் கூடிய ஒரு மாநாடாகும்.

❖ இந்த நிகழ்வு, மின்துறைசார்ந்த பல்வேறு தயாரிப்புகள் & தொழில்நுட்பங்களைக் காட்சிப்படுத்துகிறது. மேலும், வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் இடையில் ஒரு வர்த்தக தளத்தையும் இந்த நிகழ்வு உருவாக்குகிறது. அறிவு பரிமாற்றத்திற்கான பல்வேறு கருத்தரங்குகளையும் இது நடத்துகிறது.

**9.ஸ்கிரீன் ஆக்டர்ஸ் கில்ட் விருதுகளில், 'Outstanding Performance by a Female Actor in a Motion Picture' விருதை வென்ற நடிகை யார்?**

அ. ரெனீ ஜெல்வெகர் ☑

ஆ. ஜெனிபர் அனிஸ்டன்

இ. ஒலிவியா கோல்மன்

ஈ. எலிசபெத் மோஸ்



❖ வருடாந்திர Screen Actors Guild (SAG) விருதுகளின் 26ஆவது பதிப்பு அண்மையில் வழங்கப்பட்டது. 'Outstanding Performance by a Female Actor in a Motion Picture' என்ற விருது 'ஜூடி' என்ற திரைப் படத்தில் நடித்ததற்காக ரெனீ ஜெல்வெகர் வென்றார். ரெனீ ஜெல்வெகர், அண்மையில், 'ஜூடி' என்ற வாழ்க்கை வரலாற்றில் நடித்ததற்காக கோல்டன் குளோப் விருதைப்பெற்றார்.

❖ 'Outstanding Performance by a Male Actor in a Motion Picture' என்ற விருது 'ஜோக்கர்' என்ற திரைப் படத்தில் நடித்ததற்காக ஜாக்கின் பீனிக்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. தென்கொரிய திரைப்படமான 'Parasite', 'Best Performance by a Cast in a Motion Picture' விருதை வென்ற முதல் அயல்நாட்டு மொழி திரைப்படமாக ஆனது.

**10.மாநிலத்திற்கு மூன்று தலைநகரங்களை உருவாக்கும் திட்டத்திற்கு அண்மையில் ஒப்புதல் அளித்த மாநிலம் எது?**

அ. மகாராஷ்டிரா

ஆ. ஆந்திரபிரதேசம் ☑

இ. மத்தியபிரதேசம்

ஈ. உத்தரபிரதேசம்

- அமராவதி, விசாகப்பட்டினம் மற்றும் கர்னூல் ஆகிய மூன்று மாநில தலைநகரங்களை உருவாக்கும் திட்டத்திற்கு ஆந்திர பிரதேச மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ஆளும் ஜெகன் மோகன் ரெட்டி அரசு, இந்த மசோதாவை மாநில சட்டசபையில் தாக்கல் செய்தது. மாநிலத்தின் பரவலாக்கப்பட்ட மற்றும் சீரான வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான, "ஆந்திரபிரதேச பரவலாக்கம் மற்றும் அனைத்துப் பிராந்தியங்களின் உள்ளடக்கிய வளர்ச்சி மசோதா, 2020"க்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது மாநிலத்திற்குள் பல்வேறு மண்டலங்களை உருவாக்குவதற்கும் மண்டலத் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு வாரியங்களை நிறுவுவதற்கும் வழிவகுக்கிறது. அரசாங்கம் தனது சட்டமன்றத்தலைநகரை அமராவதியிலும், தலைமைச்செயலகம் மற்றும் நிர்வாக தலைநகரை விசாகப்பட்டினத்திலும், நீதித் துறை தலைநகரை கர்னூலிலும் அமைக்க முடிவுசெய்துள்ளது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ₹40,000 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடியில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கும் சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புதூரில் மின்சார வாகனம் தயாரிக்கும் ஆலையை நிறுவுவதற்கும் தமிழ்நாடு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு 'அல்கெராபி' என்ற நிறுவனத்துக்கும், மின்சார வாகனம் தயாரிக்கும் நிறுவனத்தை அமைப்பதற்கு சீன நாட்டின் 'வின்டெக்' என்னும் நிறுவனத்துக்கும் தமிழ்நாடு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- தஞ்சாவூர் விமானப்படைத்தளத்தில் சுகோய் 30 MKI போர்விமானப்படையணி தொடங்கப்பட்டுள்ளது. இதனை முப்படைத் தளபதி விபின் ராவத் தொடங்கிவைத்தார்.

---